

The 4th World Evangelism Retreat at Kumily
29th September 2014

R.N.I.No.TNTAM/2000/3629
Postal Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Nov. 2014

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

To

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

---

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 14 | நவம்பர் 2014 | கனி 12

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16




## ஏலி
## Eli

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட் அவர்களின் வேதபாடம்
கர்த்தருடைய ஊழியர்களின் செய்தி
சகோ.பால்ராஜ், சகோ.கணகராஜ், சகோ.ராஜாமணி, சகோ.சுகுமார், சகோ.ரீகன் மற்றும்
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 171

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை ஜனவரி இதழில்.

1. இடறுகிறவர்கள் எதற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்?
2. நீதிமானோ எதிலே நம்பிக்கையுள்ளவன்?
3. அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் தேவன் எதை வரப்பண்ணினார்?
4. தேவன் மனுஷனை எப்படிப்பட்டவனாக உண்டாக்கினார்?
5. தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் எவரில் இருக்கிறது?
6. நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு என்ன?
7. இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் எவர் நிலைத்திருக்கிறார்?
8. கர்த்தர் உன்னை அனுப்பினதில்லை; நீயோ இந்த ஜனத்தைப் பொய்யை நம்பும்படி செய்தாய் என்று எந்த தீர்க்கன் எந்த தீர்க்கனைப் பார்த்துச் சொன்னார்?
9. விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை, அவைகள் எவைகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
10. மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் என்ன செய்தார்கள்?

❶ உங்களது எந்த உழைப்பும் வீணாவதில்லை - டால்ஸ்டாய்
❷ அடிமையைப் போல் உழைப்பவன் அரசனைப்போல் உண்பான் - ஃப்ராங்ளின்
❸ உழைப்பின் வேர்கள் கசப்பானவை ஆனால் அதின் கனி இனிப்பானது - ஜெர்மனி

## ஏலி Eli



- இஸ்ரவேலிலே ஆசாரியனாயிருந்தவன் - (1சாமு.1:9)
- இவனுடைய நாட்களில் கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது - (1சாமு.3:1)
- ஏலி தேவ சமுகத்தில் வளர்ந்த சாமுவேலை என் மகனே என்றழைத்தான் - (1சாமு.3:16)
- தன் குமாரர்களை எச்சரித்தான் - (1சாமு.2:24,25)
- ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள் - (1சாமு.2:12)
- ஏலியின் 98வது வயதில் அவனுடைய பிள்ளைகள் ஓப்னி மற்றும் பினெகாஸ் இறந்தார்கள் - (1சாமு.4:15,17)
- இஸ்ரவேலை நாற்பது வருஷம் நியாயம் விசாரித்தான் - (1சாமு.4:18)

சிறுவர் பகுதி

## சகோதர சிநேகம் + அன்பு
## Brotherly Love + Charity

ADS.Sugumar



அன்பார்ந்த தம்பி தங்கைகளே உங்கள் அனைவருக்கும் நவம்பர் மாத வாழ்த்துக்கள். நம் தலைப்பை கவனித்தீர்களா? சகோதர சிநேகம்+அன்பு. நாம் ஒவ்வொருவரும் நம் சகோதரனை சகோதரியை நேசிக்க வேண்டும் என்பதை நம் பெற்றோர் நமக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே சகோதர சிநேகம் பற்றி நம் வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை நாம் கவனமாக பார்ப்போமானால் தன் உடன் பிறந்த சகோதர சகோதரியை மட்டுமல்ல, உலகில் உள்ள எல்லோரையுமே சகோதர சகோதரியாக நாம் நேசிக்கவேண்டும்.

2தீமோ.3:10-ல் அன்பு கொள்வதின் மூலம் விசுவாசமும் நீடிய சாந்தமும் அத்துடன் பொறுமையும் நமக்குக் கிடைக்கும்.

எபி.13:1-ல் சகோதர சிநேகம் நிலைத்திருக்கவும், நாம் அந்நியரை உபசரிக்கும் போது சிலர் அறியாமல் தேவ தூதரையே உபசரித்ததுண்டு என்று சொல்லப்பட்டுள்ளது.

1பேது.2:17-ல் எல்லாரையும் கனம் பண்ணுங்கள்.

ரோம.12:10 கனம் பண்ணுகிறதிலே முந்திக்கொள்ளுங்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

1பேது.1:22-ல் மாயமற்ற சகோதர சிநேகத்துடன் இருக்கவேண்டும்.

கொலோ.3:12-14 -ல் நாம் எதைத் தரித்துக்கொள்ளவேண்டுமென்பதையும், கிறிஸ்து நம்மை மன்னித்தது போல நாமும் மன்னிக்கவேண்டும்

1தெச.4:9,10-ல் சகோதர சிநேகம் பற்றியும் அன்பாயிருக்கும்படியும் நாம் தேவனால் போதிக்கப்பட்டவர்கள்.

எபே.4:31-ல் சகலவித கசப்பும் கோபமும், மூர்க்கமும் கூக்குரலும், தூஷணமும் எல்லா துர்குணமும் நீங்கவேண்டும்.

1பேது.3:9 தீமைக்கு தீமையை சரிக்கட்டக்கூடாது.

நீதி.6:18,19 சகோதரருக்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லக்கூடாது.

சங்.133:1 சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுவது எத்தனை நன்மையான காரியம்

ரோம.5:8 கிறிஸ்து நமக்காக பலியானதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது நாமும் அதே போல அன்பு கூரவேண்டும்.

யோவா.3:16 தேவன் நம்மேல் வைத்த அன்பு எவ்வளவு பெரியது?

ஆகையினால் தம்பி தங்கைகளே நாம் தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாக இருக்கவேண்டுமானால் நீங்க இந்த சிறிய வயதிலேயே சகோதர சிநேகத்தையும் அன்பையும் கூட்டி வழங்கவேண்டும்.

- அடுத்த மாதம் சந்திப்போம்.

*"என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல,*
*கிரியையினாலும்*
*உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" 1யோவான் 3:18*




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 14 நவம்பர்-2014 கனி - 12


ஆசிரியருரை

## தரியுவின் ஞானமான தீர்மானம்
## Darius`s Wise Decree




அநேக ராஜாக்கள் ஞானமில்லாமல் ஆட்சி செய்ததினால் அவர்களுடைய ராஜ்யபாரம் நிலை நிற்கவில்லை என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். ஆனால் தரியுவின் ராஜ்யபாரம் மிகவும் ஆசீர்வாதமானதாக மாறியது. அதற்கு காரணம்; "ராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால்; உங்களுக்குச் சமாதானம் பெருகக்கடவது. என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும்" என்று தன் ராஜ்யபாரம் எங்கும் அறிவித்தான் (தானி.6:25,26). இவன் இப்படி அறிவித்ததற்கு காரணம் இருந்தது. அதை நீங்கள் அறிவீர்களா? தானியேலை சிங்கங்களின் வாய்க்கு தப்புவித்த கர்த்தருடைய அதிசயத்தை தரியு கண்டான். மேலும், தானியேலோடு கர்த்தர் இருக்கிறார் என்பதையும் அறிந்து, அவர் அற்புதமானவர் ஆகையால் அவருக்குப் பயப்படவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை தன் ராஜ்யமெங்குமுள்ள ஜனங்களுக்கு தெரியப்படுத்தினான்.

**அவன் முதலாவது உங்களுக்கு சமாதானம் என்று எழுதினான்.** இவ்வார்த்தை எவ்வளவு அற்புதமானது பார்த்தீர்களா! சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று நம்முடைய ஆண்டவர் இயேசு மலைப்பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார். இந்த சமாதான வார்த்தையை தரியு தன் ராஜ்யத்தின் ஜனங்களுக்கு முதலாவது எழுதுகிறான். நாம் கூட சிலருக்கு கடிதம் எழுதும்போது உங்களுக்கு வாழ்த்துக்கள் என்று சொல்லி எழுதுகிறோம். அதைப்போல இவன் சமாதானம் கூறி தன்னுடைய வாக்கியத்தை துவக்குகிறான். இயேசுவின் பிறப்பின் போது; பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" என்று லூக்.2:14-ல் வாசிக்கிறோம். பூமியிலே சமாதானத்தை உண்டு பண்ண கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். ஆகையால் பூமியிலே சமாதானம் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். அந்தப்படியாக தரியு தன் ஜனங்களுக்கு சமாதானம் கூறி எழுதினான். அதைத் தொடர்ந்து எழுதும்போது; என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு

முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்றும் என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது என்றான். நடந்த சங்கதிகளை தன் கண்ணாரக்கண்டபடியால் தானியேலின் தேவன் வல்லமையுள்ள தேவன் என்றபடியால் அவருக்கு முன்பாக யாவரும் நடுங்கிப் பயப்படவேண்டும் என்று தீர்மானமாக ஒரு கட்டளையை பிறப்பித்தான். சங்கீதத்தில் படிக்கிறோம்; "கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியயோரையும் சிறியோரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார் (சங்.115:13). ஆம், அன்பானவர்களே கர்த்தருக்கு பயப்படுகிற பெரியோரும் சிறியோரும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். நீங்களும் உங்களுடைய குடும்பமும் கர்த்தருக்குப் பயப்படுகிற குடும்பமாக இருக்கிறதா?

மேலும் தன் ராஜ்யபாரத்தின் ஜனங்களுக்கு அவர் ஜீவனுள்ள தேவன் என்பதை அறிவித்தான். ஜனங்கள் ஜீவன் இல்லாத தேவனையும் தேவிகளையும் வணங்கி வந்தார்கள் ஆகையால் அவர்களும் ஜீவனுள்ள தேவனை அடையாளம் கண்டுகொண்டு, அவரை தொழுதுகொள்ளவேண்டுமென்பதற்காக தானியேலின் தேவனை சகல ஜனங்களுக்கும் அறிமுகப்படுத்தும்போது; அவர் ஜீவனுள்ள தேவன் என்று எழுதினான். இன்றைக்கு உலகம் ஜீவனுள்ள தேவனை அறியாமல். தேவனால் உண்டாக்கப் பட்டவைகளை வைத்துக்கொண்டு இதுவே நம்மை உண்டாக்கின தேவன் என்று சொல்லி வணங்கிவருகிறார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ யாரைத் தொழுதுகொண்டுவருகிறாய், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் தானியேலின் தேவன். அவர் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். பிதாவாகிய தேவன் தம்மை தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படியே தம்மைத் தொழுதுகொள்ளவேண்டுமென்று விரும்புகிறார். அந்த தேவனை இப்பூமியில் நீங்கள் தொழுதுகொண்டு அவரால் ஆசீர்வதிக்கப்படுங்கள்.

ஒரு முறை அந்நிய தேவனை தொழுதுகொண்டு வந்த தீர்க்கதரிசிகளுக்கும் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கும் வாக்குவாதம் உண்டானது, அப்பொழுது எலியா கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான். அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி; கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர். இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டுவரட்டும் ஒரு காளையை அவர்கள் தெரிந்தகொண்டு அதை நெருப்புப்போடாமல் பலியிடட்டும். ஒரு காளையை நான் நெருப்புப்போடாமல் பலியிடுகிறேன். அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான். அவர்கள் காலைதொடங்கி மத்தியானம் மட்டும் பாகாலின்பெயரைச் சொல்லி கூப்பிட்டார்கள் ஒரு உத்தரவும் பிறக்கவில்லை. எலியா பலிபீடத்தை செப்பனிட்டு பலியின் மேல் தண்ணீர் ஊற்றி வாய்க்கால்களை உண்டுபண்ணி, அதிலும் தண்ணீர் ஊற்றி "கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும் என்னைக் கேட்டருளும் என்றான். அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி அந்தச் சர்வாங் தகனபலியையும், விறகுகளையும் கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்கள் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்" (1இரா.18:37,39). அவர் நாம் கூப்பிடும்போது செவிகொடுக்கும் ஜீவனுள்ள தேவனாக இருக்கிறார். ஆகையால் தரியு தன் ராஜ்யபாரத்து ஜனங்களுக்கு அவர் ஜீவனுள்ள தேவன் என்று எழுதினான். இந்த ஜீவனுள்ள தேவனை ஆராதித்து ஜீவனுள்ள நாளெல்லாம் அவருக்கு ஊழியம் செய்யுங்கள். அப்பொழுது வானத்திற்கும் பூமிக்கும் மேலான கர்த்தரால் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.



தொழுகைக்கும் வாழ்க்கைக்கும் இடையே உள்ள (தொடர்பு) இணைப்பு, இது இரண்டையும் நீங்கள் பிரிக்க முடியாது. ஒருவருடைய தொழுகை நன்னடத்தையை எதிர்க்க கூடியதாயிருந்தால் அதில் தேவன் பிரியப்படார்.

நம்முடைய செயல்கள் சரியாயிருந்தால் மட்டும் போதாது, இஸ்ரவேலிலே தொழுகையின் பலன் பரிசுத்த ஜீவியமாக இல்லை.

1. உதாரணமாக (ஏசா.1:10-17) இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவர வேண்டாம். தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது (ஏசா.1:13). உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது. அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவைகளைச் சுமந்து இளைத்துப்போனேன் (ஏசா.1;14).

தூபங்காட்டுதல் தேவனுக்கு அருவருப்பாயிருக்கிறது. அவர்களுடைய பக்தியான கூடுகைகளை கர்த்தர் இனிமேல் சகித்துக் கொள்ளமாட்டார். உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன். உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை. உங்கள் தகனபலிகளையும் போஜனபலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்க மாட்டேன் . தொழுகையில் உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திர பலிகளையும் நான் நோக்கிப் பார்க்க மாட்டேன் (ஆமோஸ் 5:21,22).

3. அவர்கள் பலிகளெல்லாம் சரியே ஆனால் அவர்களுடைய வாழ்க்கை அதன்படியில்லை.

4. நாம் வாழும் ஜீவபலியாக இருக்கவேண்டும். அப்படியிருக்க சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களை தேவனுக்கேற்ற ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (ரோம.12:1). அனுதின வாழ்க்கையிலிருந்து நாம் சில சமயம் தொழுகையைப் பிரித்து விடுகிறோம்.

1. கீழ்ப்படிதலும் தொழுகையும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்து செல்வது.

2. நாம் ஒரு அமைதியான நிலைக்குச் சென்று தொழுது கொண்டுவிட்டு பின்பு நம் விருப்பம்போல வாழ முடியாது.

3. யோவான் 6-ம் அதிகாரத்தில் இயேசு சொன்னார். என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. இங்கே இயேசுவானவர் கர்த்தருடைய போஜனத்தை பற்றி சொல்லாமல் வெளிப்படையான உதட்டளவிலான செயலுக்கும் உள்ளான மனிதனின் நிலையையும் பற்றிப் பேசுகிறார். அவரை விருப்பத்துடன் பார்த்தைப் பற்றியும் உண்மையாகவே ஒருவன் தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றுவதைப் பற்றியும் பேசுகிறார். கிறிஸ்தவனைப் போல வெளியில் நடிப்பதைப் பற்றியும் இருதயத்தில் உண்மையான கிறிஸ்தவனாயிருப்பதைப் பற்றியும் பேசுகிறார்.

4. நாம் சத்தியங்களைப் பாடுகிறோம். ஆனால் சத்தியத்தை கடைபிடிப்பதில்லை.

இயேசுவரும்வரை நாம் வேலை செய்வோம். என் இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன். நீர் என்னுடையவர் என்று அறிவேன். உமக்காக மதியீனமான என் எல்லாப் பாவங்களையும் விட்டு விடுகிறேன். என்னிடம் வேதாகமத்தைக் கொடுங்கள். அன்புடன் அதன் உண்மைகளைச் சொல்ல விரும்புகிறேன். அவர் என்னை எங்கே நடத்துகிறாரோ அங்கே செல்வேன்.

முடிவுரை: 1. நசரேயனாகிய இயேசுவின் பிரசன்னத்தில் வியந்து நிற்கிறேன். என்னை அவர் எப்படி நேசிக்க முடியுமென்று ஆச்சரியப்படுகிறேன்.

2.கண்டனம் பண்ணப்பட்ட அசுத்த பாவியாகிய நான்! உண்மையாகவே வியப்படைகிறோமா!

3. நாம் தொழுதுகொள்ளவேண்டுமென்பதற்காக தொழுதுகொள்வதில்லை. தேவன் யாரென்பதற்காகவும், நாம் யாரென்று உணர்ந்ததாலும் நாம் நம்முடைய வாழ்க்கையை அவருடைய சித்தத்துக்கு சரணடையச் செய்ததாலும் அவரைத் தொழுதுகொள்கிறோம்.

4. அது ஒன்றே ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழுகை.

2. சீயோனிலே வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டு கெம்பீரி இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவிலிருக்கிறார் (ஏசா.12:6).

3. நாம் தேவனுடைய குணாதிசயமாகிய பரிசுத்தத்தை வெகுவாக இழந்துவிட்டோம். ஆனால் எல்லா பண்புகளுக்குப் பின்னால் பரிசுத்தம் ஒன்றே பின்னாலிருக்கிறது. தேவனுடைய பரிசுத்தத்தை நாம் இழந்துவிட்டால் நாம் தேவனை இழந்து விடுவோம்.தேவன் நம்முடைய மத்தியில் இருக்கிறார். ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார் (மத்.18:20).

1. தொழுதை என்பது ஏதோ கடவுளைப் பற்றிய ஒரு எண்ணம் அல்லது கடவுளின் இயல்பைக் கொண்டாடுவதல்ல ஆனால் அது அவருடைய பிரசன்னத்துக்குள்ளாகவே கடந்து செல்வது.

2. எபிரெயர் 10-ம் அதிகாரத்தின் முன் பகுதியில் கிறிஸ்து பலியானதை பழைய பிரமாணத்தில் பலியிடப்பட்ட மிருக பலிக்கு ஒப்பிட்டுப்படிக்கிறோம்.

3. அதன் பலனாக நாம்... உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (எபி.10:22).

4. தேவனை வணங்குவதென்பது நாம் ஒருவகையில் அவருக்கு பதிலளிப்பதாகும். ஆகையால் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி.4:16). நாம் யாரென்பதைக் காட்ட நாம் தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும். நாம் குறையுள்ளவர்கள், கொடுக்க ஒன்றுமில்லாதவர்கள், தேவனைத் தேடத்தகுதியற்றவர்கள்.

1. அப்பொழுது நான் ஐயோ அதமானேன் நான் அசுத்த உதடுகளுள்ள மனிதன் அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவிலே வாசமாயிருக்கிறவன், சேனைகளின் கர்த்தராகிய இராஜாவை என் கண்கள் கண்டதே (ஏசா.6:5.

2. எழுதப்பட்டபடி நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. உணர்வுள்ளவன் இல்லை தேவனைத் தேடுகிறவன் இல்லை. எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் நன்மை செய்கிறவன் இல்லை. ஒருவனாகிலுமில்லை (ரோம.3:10-12).

3. ஸ்டீபன் லோகன் பிரிங்லே பின்வருமாறு எழுதினார். நான் இயேசுவின் தாழ்மையைப் பார்த்தேன். என்னுடைய பெருமையையும் பார்த்தேன். இயேசுவின் சாந்தத்தையும் என்னுடைய கோபத்தையும் பார்த்தேன். இயேசுவின் எளிமையையும், என்னுடைய பேராசைகளையும் இயேசுவின் சுயநலமற்ற தன்மையையும் என்னுடைய சுயநலமிக்க தன்மையையும் இயேசுவின் பரிபூரண நம்பிக்கையையும் விசுவாசத்தையும் என்னுடைய சந்தேக புத்தியையும் அவிசுவாசங்களையும் பார்த்தேன்.

3. மற்ற எல்லாரை விட்டு என்னுடைய பார்வையை எடுத்து எனக்கும் இயேசுவுக்கும் இடையே மட்டும் வைத்துக்கொண்டேன். பின்பு, நான் என்னையே வெறுக்கத் துவங்கினேன்.

கிறிஸ்துவே தகுதியானவர் (எபி.1:10; 14,19).

1. தொழுகையிலே பரிசுத்த தேவனுக்கும் அசுத்த மனிதர்களுக்குமிடையே நமக்கு ஒரு போராட்டமுண்டு.

2. சரணடைதல், அடங்கிப்போதல் மற்றம் கீழ்ப்படிதல் ஆகியவற்றை இது பயமுறுத்துகிறது.

3. ஒருவருக்கு அல்லது எதற்காகிலும் சரணடைவது என்பது கடினமான ஒன்று.

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள்.

தன் முழங்காலிலே நின்று ஜெயித்த ஒரு வயதானவரை எனக்குத் தெரியும்.

தலை வணங்குவதை அவமானமாக நாம் சொல்லுகிறோம். தேவன் யாரென்று நாம் உணர்ந்தால் சாதரணமாக அவருக்கு முன் நாம் உட்கார முடியுமா? அவருக்கு முன் படுத்து கிடக்கும் நிலையை நாம் கற்பனை செய்ய முடியுமா?



மேலும், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர் என்று எழுதினான். இன்றிருந்து நாளைக்கு அடுப்பிலே போடக்கூடிய மரத்தை வைத்து மனிதன் நமஸ்கரிக்கிறான். ஆனால் தேவன் அழியக்கூடியவர் அல்ல. அவர் அழிவில்லாதவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர். மனிதர்கள் கொஞ்சநாட்கள் வாழ்ந்து மரித்துப்போகிறார்கள். அதைப்போல அவர் மரித்துப்போகிற ஒருவரல்ல. மனிதன் தேவனை அவனுடைய எண்ணத்திற்கும் சாயலுக்கும் ஒப்பிட்டு பார்க்கிறான். அன்பானவர்களே, தேவன் மனிதனை உண்டாக்கினார். மனிதன் தேவனை உண்டாக்க முடியாது. ஏனென்றால் அவர் ஒளியாயிருக்கிறார். ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் அவர் வாசம்பண்ணுகிறார். அவரை ஒருவரும் கண்டு உயிரோடிருக்க முடியாது அவர் வல்லமையில் மகத்துவமுள்ளவர். ஆலோசனையில் அதிசயமானவர். அவர் அடைத்தால் ஒருவரும் விடுவிக்கமுடியாது. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். அந்த தேவனை மனிதனால் சிருஷ்டிக்க முடியுமா? அவர் மோசேயோடு பேசும்போது; "இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொன்னார்" (யாத்.3:14). அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே அவர் இருக்கிறார். அவர் சத்தியபரர் பொய்யுரையாத தேவன் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. மனிதன் மாறுவான் அவனுடைய எண்ணங்கள் மாறும். ஆனால் கர்த்தரோ என்றும் மாறாதவர். ஆண்டவர் இயேசுவைப் பற்றி எபிரெய ஆசான் எழுதும்போது "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று எழுதுகிறார் (எபி.13:8).

மேலும், அவருடைய ராஜ்யம் அழியாதது என்று எழுதினான். ஆம், அன்பானவர்களே, அழிந்துபோகிற ராஜ்யத்தில் ஆளுகை செய்துகொண்டிருக்கும் தரியு ராஜா ஒரு அழியாத ராஜ்யபாரத்தைக் கண்டு கொண்டான். தானியேல் அந்த ராஜ்யத்தைக்குறித்து தானியேல் 2:44-ல் சொல்லியிருக்கிறார்; "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்திற்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதைக் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" என்றான். உலக ராஜ்யங்கள் உலகத்தில் ஏற்படுத்தப்பட்டவைகள் ஆனால் தேவன் என்றென்றைக்கும் அழிந்துபோகாத ஒரு ராஜ்யத்தை கிறிஸ்துவின் மூலமாக ஏற்படுத்தியிருக்கிறார். அந்த ராஜ்யத்தைக்குறித்து தானியேல் தீர்க்கதரிசனமாக உரைத்தார். பரலோகத்தின் தேவன் ஆவிக்குரிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அநேகரை சேர்த்துக்கொண்டும் வருகிறார் என அறிகிறோம். இந்த ராஜ்யத்தை தன்னுடைய ராஜ்யபாரத்தில் ராஜாவாக இருந்த தரியு தானியேல் மூலமாக அறிந்துகொண்டான். இயேசுவின் பிறப்பின்போது ஏரோது யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே என்று முறுமுறுத்தான். தன்னுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக ஒரு ராஜா பிறந்திருக்கிறாரா! என்ற அச்சம் பயம் அவனுக்குள் ஏற்பட்டது. ஆனால் தரியு ராஜாவாக இருந்தும் அழியாத ஒரு ராஜ்யத்தைக் கண்டுகொண்டு அதை ஜங்களுக்கு எழுதி தெரியப்படுத்தினான். இந்த தரியுவுக்கும் ஏரோதுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தீர்களா? இது அவனுடைய ஞானமான தீர்மானம் என காண்கிறோம். யோவான் ஸ்நானன் தேவனால் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன். அவன் இயேசு வந்தவுடன் அவனுடைய வேலை முடிந்துவிட்டது. ஆகையால், அவன் இயேசுவைக்குறித்து சொல்லும்போது; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான். மேலும், தம்முடைய சீஷர்களைப் பார்த்து இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி என்றான். அவனுடைய சீஷர்கள் அவர் பின்னே போனார்கள். தன்

பணியை நிறைவேற்றி தனக்குப்பின் வரும் ஆண்டவர் இயேசுவை அறிவித்தான். அதைப்போல தரியு ராஜாவாக இருந்தும் தனக்குப்பின் வரும் அழியாத தேவனுடைய ராஜ்யத்தை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினான். மேலும். அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும். பாதியிலே போகும் உலக ஆட்சியை பார்க்கிறோம். ஆனால் தேவனுடைய ஆட்சி முடிவுபரியந்தமும் நிலைநிற்கும். ஆளுகை என்றவுடன் அநேகர் கிறிஸ்து ஆயிரம் வருஷம் அரசாளுவார். அப்பொழுது அவருடைய ஆளுகையின் கீழ் நாமெல்லாரும் இருப்போம் என்று எண்ணுகிறார்கள். கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடம்போலவும் ஆயிரம் வருடம் ஒருநாள் போலவும் இருக்கிறது. இந்த உண்மையை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம். ஆண்டவருடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியது அல்ல; "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" என்று இயேசுதாமே சொல்லியிருக்கிறார் (யோவா.18:36).

கடைசியாக, தரியு எழுதும்போது; அவர் தப்பிவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமா யிருக்கிறார் என்று எழுதினான். ஆம், அன்பானவர்களே, இயேசு ஒருவரே வானத்திலும் பூமியிலும் அடையாளங்களைச் செய்ய வல்லவர். அவருக்கு அந்தவிதமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார் (மத்.28:18). தரியு ராஜாவைப்போல அந்த ஜீவனுள்ள தேவனிடத்திற்கு உங்களை திருப்புங்கள். மற்றவர்களுக்கும் அவரைக் குறித்து அறிவியுங்கள்.


**ஜீவனுள்ள தேவனை சேவிக்க பாஷை ஒரு பிரச்சனையா?**

உகலத்தில் தோன்றின எல்லா பாஷைகளையும் கர்த்தர் அறிவார். பாஷைகள் பாபேல் கோபுரத்திற்குப் பின்பு உண்டாயின. எல்லா பாஷைக்காரர்களும் கர்த்தரை தொழுதுகொள்ளலாம். "சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்ததுவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" என தானி.7:14-ல் படிக்கிறோம். இதை அறிந்த தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினான். ஜீவனுள்ள தேவனை சேவிக்க பாஷை ஒரு தடையல்ல. எந்த பாஷையில் தொழுது கொண்டாலும் கர்த்தர் கேட்டு அவர்களுடைய தொழுகையை அங்கிகரிப்பார். "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவனெவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்கிறார் பேதுரு (அப்.10:35). எனவே பாஷையோ அல்லது எந்த ஜனமோ ஒரு பிரச்சனை அல்ல, அருக்குப் பயந்து நீதியைச் செய்யுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### நடப்புச் செய்திகள்

- கடல்சார் ஆராய்ச்சிக்கு உதவும், ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்., 1சி செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து அக்.16-ம் தேதி ஏவப்பட்டது.
- அமெரிக்க நீதித் துறை அமைச்சகத்தின் சிவில் உரிமைப் பிரிவு தலைமைப் பதவிக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வனிதா குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.
- ' தூய்மை இந்தியா' என்ற திட்டத்தை பிரதமர் மோடி அக்.2-ல் துவக்கிவைத்தார்.
- மதுரையில் உள்ள வங்கிகளிலிருந்து கடந்த 2012 முதல் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்ட பணக்கட்டுகளில் ரூ.45 ஆயிரம் மதிப்புக்கு கள்ள நோட்டுகள் இருப்பதாக தெரியவந்துள்ளது.





## பாடம் -9 தொழுகையின் ஆதாரங்கள் - *Jerry Bates*

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

1. மனிதன் தொழுது கொள்ளுகிற சிருஷ்டி கர்த்தர் மனிதனை சிருஷ்டித்தது தன்னைத் தொழுது கொள்ளவும் மகிமைப்படுத்தவுமே.

2. இயேசுவானவர் தெளிவாகச் சொல்கிறார். மனிதன் தேவன் ஒருவரையே தொழுது கொண்டு தேவன் ஒருவருக்கே சேவை செய்யவேண்டுமென்று.

3. புதிய ஏற்பாட்டில் தொழுகையைக் குறிக்கும் வார்த்தைகளின் அர்த்தம் வந்தனம் செய்வது அல்லது ஒருவரை பயத்துடன் கூடிய கனத்தோடு வணங்குவது என்பதே. ரிக் அட்ச்லே தொழுகைக்கு பின்வருமாறு பொருள் கொள்கிறார். கடவுள் என்னவாக இருக்கிறாரோ அந்தப்படியே அடையாளம் கொள்வது. உன்னை யாரென்று உள்ளபடியே அடையாளம் காண்பது. அதற்கேற்றாற்போல நடந்து கொள்வது.

4. ஏன் தேவனை மட்டும் தொழுது கொள்ள வேண்டும்? வேறொன்றும் அல்லது வேறு ஒருவரும் அவரைப்போல் இல்லை.

1. தொழுகை தேவனின் தன்மையிலிருந்து தொடங்குகிறது. தேவன் யார்? தேவனுடைய குணாதிசயங்கள் மனிதனுடையதிலிருந்து முற்றும் வேறுபட்டது (சங்.33:45).

1. நேர்மையானவர் - வஞ்சகமில்லாதவர், கடவுளிடம் பொய்யான செயலோ வார்த்தைகளோ கிடையாது.

2. தேவன் நீதியும் உண்மையுமானவர்.

3. அவருடைய செயல்களெல்லாம் அவருடைய அன்பின் உருக்கங்களால் நிறைந்தது. தேவன் சிருஷ்டிகர் (சங்.33:6-9). தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தபடியால் நாம் அவரை பயத்துடன் தேடவேண்டும்.

1. பூமி 100000 மைல்களுக்கு அப்பால் உள்ள விண்வெளிப் பாதையின் ஒரு பகுதியாகும். ஒரு ஒளி வருடம் என்பது 589000000 மைல்களாகும்.

2. அக்டோபர் 26,1990-ல் வந்த கமர்சியல் அப்பீல் என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரையில் "விஞ்ஞானிகள் மிகப்பெரிய நட்சத்திர கூட்டத்தைக் துள்ளியமாகக் குறிப்பிடுகின்றனர். அது நட்சத்திரப் பாதையை குட்டையாக்குகிறது" அதிலே 1000 கோடி நட்சத்திரங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். நட்சத்திரப் பாதையின் மூன்று கோடி இருக்கின்றன. இந்தக் கூட்டம் 100 கோடி ஒளி ஆண்டுகள் அப்பாலிருப்பதாக சொல்லப்படுகிறது.

3. உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும் நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷ குமாரனை விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன் (சங்.8:3,4).

பழைய ஏற்பாடு தேவனை சர்வ வல்லவர் வல்லமையுள்ளவர் இஸ்ரவேலின் பரிசுத்தர் என்று அறிவிக்கிறது.

1. ...இது அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரை கோபமூட்டினார்கள் (ஏசா.1:4).

2. நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும் இஸ்ரவேலின் சிருஷ்டிகரும் உங்கள் இராஜாவுமானவர் (ஏசா.43:15)

3. தேவனைக் குறிப்பிடும்போது ஏசாயா 29 முறை பரிசுத்தர் என்கிறார்.

4. தேவன் நம்மைப் போன்றவரல்ல.

இது ஒரு பெரிய முரண்பாடு பரிசுத்தர் நம் நடுவிலிருக்கிறார்.

1. என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன். எப்பிராயீமை அழிக்கும்படி திரும்பமாட்டேன். ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன். நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர் ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாகவரேன் என்றார் (ஓசி.11:9)



# பெருகுங்கள் – Abounding

- S.I.Reagan

பிரியமான விசுவாசிகளே கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதல். இம்மாதம் பெருகுங்கள் என்ற தலைப்பில் உங்களுடனே பேசுகிறேன். பெருகுங்கள் என்றால் நாம் உலக அளவில் ஐஸ்வரியம் மற்றும் ஆஸ்தி, அந்தஸ்து வியாபாரத்தில் பெருதல் அல்ல. உலக பெருக்கத்தைப்பற்றி இங்கு நான் பேசவில்லை.

கிறிஸ்துவுக்குள் நாம் எவைகளில் எவ்வளவு பெருகுகிறோம். என்பதைத் தான் நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம். பிரியமானவர்களே, ஆதியாகமத்தில் பலுகி பெருகவேண்டுமென்று தேவன் நம்மை ஆசீர்வதித்தார். அவைகளை நாம் சரீரப்பிரகாரமான பெருக்கம் என்று தேவன் கருதி உலக வாழ்க்கையில் பெருகிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் ஆவிக்குரிய காரியத்தில் பெருகுகிறவர்களாய் இல்லாமல் இன்று குறைவுள்ளவர்களாகவே இருக்கிறோம்.

ஆவியில் நாம் எப்படிப் பெருக வேண்டும்? 1. முதலாவது விசுவாசத்தில் பெருகவேண்டும் என்று பவுல் கொலேசெய பட்டணத்திற்கு எழுதும்போது கொலோ 2:7-ல் விசுவாசத்தில் பெருகுவிர்களாக என்று எழுதுகிறார். நமக்கு போதிக்கப்பட்ட வசனத்தின்படி நாம் விசுவாசத்தில் பெருக வேண்டும். 2. நற்கிரியை செய்வதில் பெருகவேண்டும். 2கொரி.9:8 அவருடைய சகல கிருபையிலும் நம்மை பெருகச் செய்வார். 3. அன்பிலே பெருகவேண்டும். 1தெச.4:10; 1தெச.3:12 இந்த அன்பை மற்றவர்களிடத்தில் பகிர்ந்துகொள்ளவேண்டும். ஆகையால் பிரியமானவர்களே ஒருவன் கிறிஸ்துவின் வசனத்தின் மீது நம்பிக்கை கொண்டு விசுவாசத்திலும், நற்கிரியைகளிலும், அன்பிலும் பெருகவேண்டும். அப்படிப் பெருகும்போது தேவன் எசேக்.36:30-ன்படி விருட்சத்தின் கனிகளையும் வயல்களின் பலன்களையும் நம் வாழ்க்கையில் பெருகப்பண்ணுவார். நம் வாழ்க்கையில் உள்ள பஞ்சத்தை நீக்கி சகல நன்மையினாலும் நம்மைப் பெருகப்பண்ணுவாராக!

தெரிந்து கொள்வோம்

## செங்கடல்

- K.R.K.Ravi Asir
Associate Editor




1500 மைல் நீளமுள்ள செங்கடல் ஆப்ரிக்காவுக்கும், அரேபிய தீபகற்பத்திற்கும் இடையே ஒரு இயற்கையான பிரிவாக அமைந்திருக்கிறது. இது ஆடன் வளைகுடாவிற்கும் அரபிக்கடலுக்கும் இடையே சென்று இந்தியப்பெருங்கடலில் முடிவடைகிறது. இந்நீர் நிலை ஏறத்தாழ சராசரியாக 180 மைல் அகலம் இருந்து, படிப்படியாக குறைந்து வடக்கு, தெற்கு எல்லைகளை அடைகிறது. சூயஸ் கால்வாய் கட்டப்பட்ட காலந் தொடங்கி, மத்திய தரைக்கடலில் இருந்து இந்தியாவுக்கும், கிழக்கத்திய நாடுகளுக்கும் செல்லும் கப்பல் செங்கடல் வழியாக கடந்து செல்கின்றன. செங்கடலுக்கு வடபகுதியில் இரண்டு கிளைகள் அமைந்துள்ளன. மேற்கு பகுதியில் இருநூறு மைல் நீளமான சூயஸ் வளைகுடா அரபு தேசத்தையும், எகிப்துதேசத்தையும் பிரித்து, சூயஸ் கால்வாயில் போய் சேருகிறது. செங்கடலுக்கு கிழக்கே நூறு மைல் நீளமான அகபா வளைகுடா சீனாய் தீபகற்பத்தையும் அரபு தேசத்திலிருந்து பிரிக்கிறது.





# ராஜ்யத்தைப் பிரசங்கித்தல்

## Praching the Kingdom

J.C.Choate

பழைய ஏற்பாடு முழுவதிலும் வரப்போகிற ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றிய ஒரு மாபெரும் செயலாற்றல் சொல்லப்பட்டது. ஏசாயா கடைசி நாளில் கர்த்தருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என முன்னறிவித்தான் (ஏசா.2:2,3). தானியேல் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் என்றான் (தானி.2:44). யோவேல் அந்நாட்களில் மாம்சமான யாவர் மேலும் கர்த்தருடைய ஆவி ஊற்றப்படும் என்றான் (யோவே.2:28,29), மேலும் பேதுரு: யோவேலின் தீர்க்கதரிசனம் அப்.2-ல் எழுதப்பட்டுள்ள மிகமுக்கியமான நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்டது என்றான்.

யோவான்ஸ்நானன் வந்து பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என பிரசங்கித்தான் (மத்.3:1,2), மேலும் கிறிஸ்து தம்முடைய சமூகத்தில் நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று சொன்னான் (மாற்.9:1). கடைசியாக, கிறிஸ்து தாம் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது மெய் என, வெளிப்படுத்தும்படி இந்தக் கல்லின் மேல் தம்முடைய சபையை தாம் கட்டுவேன் எனச் சொன்னார் (மத்.16:18,19; 1கொரி.3:11). அவர் மனுஷருக்கும் ஸ்திரீகளுக்கும் ராஜ்யம் அல்லது சபைக்குள் பிரவேசிப்பதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டுமென சொல்லும் அதிகாரமாகிய பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை அப்போஸ்தலருக்குக் கொடுப்பேன் என வாக்களித்தார்.

ராஜ்யத்தின் ஸ்தாபனத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எருசலேமில் அப்போஸ்தலர்மேல் பரிசுத்த ஆவியின் பலமாக ஊற்றப்பட்டு, இவ்விதமாக நிறைவேற்றப்பட்டது என்றும், மேலும் ஆவியானவர் அவர்களுக்கு வார்த்தையினால் பொழிந்தருளப்பட்டு அவர்கள் வெவ்வேறு பாஷைகளில், அல்லது அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள் என்றும் அப்போஸ்தலர் 2-ல் நாம் காண்கிறோம். இதுவே யோவான் சொல்லியிருந்ததும், பரலோகத்திலிருந்து வரப்போகிறதும், கிறிஸ்து தாம் கட்டுவேன் எனச் சொல்லியிருந்ததுமான சீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படபோகிற ராஜ்யமாயிருந்தது. அதன்பின் அப்போஸ்தலர், பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களைப் பயன்படுத்தினார்கள் அல்லது முதன் முறையாக அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பாவியான மனிதன் எவ்வாறு இரட்சிக்கப்பட முடியும் என்பதை வெளிப்படுத்திய சபையாயிருந்தது. அதைக்கேட்டு, விசுவாசித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, தங்களுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டு, கர்த்தர்தாமே சம்பாதித்துக்கொண்ட சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

ஆனபடியால் ராஜ்யமும் சபையும் ஒரே நிறுவனமாக, தேவனுடைய வீடாக அல்லது கிறிஸ்துவினுடைய ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது (1தீமோ.3:15; 1கொரி.12:27). பவுல் கொலேசெய சபைக்கு, ‘‘இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, நமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை

ஸ்தோத்திரிக்கிறேன்" என தேவனைக் குறித்து பேசி உணர்த்தினான் (கொலோ.1:13). எபிரெய ஆசிரியர், "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" (எபி.12:28) என்றான். இப்பொழுது அவன் எந்த ராஜ்யத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தான்? தேவனுயைடய ராஜ்யம், பரலேகத்திலிருந்து வந்த ராஜ்யம், கர்த்தருடைய சபை, கர்த்தர் இரட்சித்து அதில் சேர்த்துக்கொண்ட ஜனங்களை உள்ளடக்கிய, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக உருவாயிருக்கின்ற, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கின்ற, மேலும் சபையாயிருக்கின்றவற்றைக் குறித்தே பேசினான் (எபே.1:22,23; கொலோ.1:18).

அடுத்தாற்போல் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல். கிறிஸ்துவைப்பற்றி வேதவாக்கியம், "அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" (அப்.1:3). வேறொரு சமயத்தில், கிறிஸ்து எருசலேமில் சீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படப்போகிற ராஜ்யம் அல்லது சபையைக் குறித்து அப்போஸ்தலருக்குக் கடைசி அறிவுரைகளைக் கொடுக்கின்றார். அவர் தொடர்ந்து, பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள்என்றார்" (அப்.1:8).

எனவே அப்போஸ்தலர் 2-ல் கர்த்தருடைய சபையாகிய அந்த ராஜ்யம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த, சேர்க்கப்பட்ட 3000 பேருடன் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் சேர்க்கப்பட்டனர் (அப்.2:41). சுவிசேஷமானது மீண்டும் மீண்டும் எருசலேமிலும் யூதேயாவிலும் பிரசங்கிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அதே சபையில் சேர்க்கப்பட்டனர். ஆனால் அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டனர். இந்தக் குறிப்பில், வேதம், "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்" (அப்.8:5)எனக்கூறுகிறது. தொடர்ந்து நாம், "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.8:12) என வாசிக்கிறோம்.

எனவே நாம் என்ன அறிகிறோம்? நாம் தேவனுடைய ராஜ்யத்துக் கேற்றவைகளைக் குறித்து கர்த்தர் அப்போஸ்தலருக்கு என்ன அறிவுறுத்தினார் எனவும், அதன்பின் பிலிப்பு கிறிஸ்துவைக் குறித்து சமாரியர்களுக்கு என்ன பிரசங்கித்தான் எனவும் காண்கிறோம். ஆனால், அவன் இவ்வாறு பிரசங்கிக்கையில் அவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தை பற்றியும் பிரசங்கித்தான் என்பது ஆச்சரியமே! ஏன் அங்கு ராஜ்யம் அல்லது சபை பற்றி அதிகமுக்கியத்துவப்படுத்தப்படுகிறது? ஏனென்றால் இது மனிதவர்க் கத்திற்கென்று தேவனுடைய முயற்சியின் மிக உன்னத கட்டமாக இருக்கிறது; இது அவர் இரட்சிப்பை அருளுவதற்கான சாதனமாகும். இது தேவனிடத்திலிருந்து வந்தது, இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது. கர்த்தர் இதை வாக்குப்பண்ணியிருந்தார், மேலும் அதில் இரட்சிக்கப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டவர்களாயிருந்தனர்! இதனுடைய முக்கியத்துவம் சொல்லிமுடியாதது.



## சென்ற மாத அறுவடையின் கனிகள்
## தேனி மாவட்டம்
## ஆனைமலையான்பட்டி




**நீ உன் வாலிபப்பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்" (பிரசங்கி 12:1)**

இச்செய்தியைக் கேட்டு தங்களை ஆண்டவருடைய வல்லமையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு அப்போஸ்தலர் 2:47–ல் சொல்லப்பட்டுள்ளபடி கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர். இவர்களுடைய நாமங்கள் பரலோகத்திலே உள்ள ஜீவபுஸ்தகத்தில் எழுதிப்பட்டிருக்கும். பரலோகமே சந்தோஷப்படும் வேளையில் நாமும் சந்தோஷப்பட்டு இவர்களுக்காக ஜெபிப்போம்.

# இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் போல் உள்ளவன் இன்று யார் ?

-V.Paulraj



சீமோனின் குமாரனாகிய யுதாஸ் காரியோத்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதய்ததைத் தூண்டின பின்பு (யோவான் 13:2) அவரைப் பிரதான ஆசாரியருக்குக் காட்டிக்கொடுக்கும்படி அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் அதைக் கேட்டு சந்தோஷப்பட்டு அவனுக்குப் பணம் கொடுப்போம் என்று வாக்குத்தத்தம் பண்ணினார்கள் (மாற்.14:10,11) அவன் இயேசுவினிடத்தில் வந்து, ரபீ வாழ்க என்று சொல்லி அவரை முத்தஞ்செய்தான். இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய் என்றார் (லூக்.22:48) அப்பொழுது அவர்கள் அவர்மேல் கைபோட்டு அவரைப் பிடித்தார்கள் (மாற்.14:46).

இயேசுவுக்குச் சீஷனாய் அப்போஸ்தலர்களில் ஒருவனாய் பணப்பொறுப்புள்ள அதிகாரம் பெற்ற யூதாஸ் காரியோத்து கிறிஸ்துவுக்கு தன் இருதயத்தை ஒப்புக்கொடாமல் பிசாசானவன் தூண்டுதலுக்கு தன் இருதயத்தை ஒப்புக்கொடுத்ததைப்போல பிரதான ஆசாரியருக்கும் விலையேறப் பெற்றவரை முப்பது வெள்ளிக்காசுக்காக பண ஆசையினால் காட்டிக்கொடுத்துபோல, இயேசுவை முத்தமிட்டு அன்பு செலுத்துவதுபோல நடித்து மாயையான அன்பு செலுத்தியதுபோல இயேசுவோடு இருந்த அவன் அதோ இயேசு என்று அவரையும் தன்னையும் வேறுபடுத்திக் காட்டிக்கொடுத்ததுபோல;

இன்றைக்கும் அநேகர் பிசாசின் தூண்டுதலினாலே பணஆசைக்க அடிமையாகி கிறிஸ்துவின் (சரீரமாம்) சபையிலிருந்து விலகி, தாங்கள் ஆராதனை செய்யும் சபையை வேறுபடுத்திக் காண்பிப்பவனே காட்டிக் கொடுப்பவன் அல்லாமல் வேறு யார்?

## தெரிந்து கொள்வோம்! தேவனின் பெயர்



**EL ELYON** (யேல் யேலியான்)

பொருள்: உன்னதமான தேவன்.நாம் முழு நம்பிக்கை வைக்கும்படியான உன்னத தேவன்

பொருத்தமான குறிப்பு: ஒப்புயர்வற்ற இறைமையாளர் பொய்யான தேவர்களைவிட தனிச்சிறப்புடைய மேன்மையானவர்

வேதக்குறிப்பு: ஆதி.14:17-20; யாத்.5:1; சங்.68:8; 106:48

உச்சரிப்பு: யேல்- யேல்-லியான். உன்னதமான தேவனுடைய ஆசாரியராய் இருந்தவர். "மெல்கிசேதேக்கு" (சருசலேம் நகரத்தின் பழைய பெயர் "சாலேம்" சாலேம் என்றால் "சமாதானம்" (சாலேம் என்ற பெயரில் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஐரோப்பா கண்டத்தில் பல நகரங்களிலும் அமெரிக்காவில் 3 நகரங்களிலும தமிழகத்தில் (Salem - சேலம்) என்ற நகரமும் அழைக்கப்படுகிறது) இவர் அரசனாகவும், ஆசாரியனாகவும் செயல்பட்டவர். (இயேசுவுக்கு நிழலானவர்) ஆதி.14:18-20-ல் மூன்று முறை உன்னதமான தேவன் அழைக்கப்பட்டுள்ளதை அறிக! இப்பேர்பெற்றவன் "ஆபிராமை" ஆசீர்வதித்தான்.

- John S.Nathan



சிலசமயங்களில் சபை முக்கியமானதல்ல என்றும் நாம் அது குறித்து அதிகம் பேசக்கூடாதென்றும் ஜனங்கள் கூறுகின்றதை நாம் கேள்விப்படுகிறோம். சபை இரட்சகர் அல்ல என்பது உண்மை, ஆனபடியினால் இது இரட்சிக்கப்பட்ட மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ளது; ஆனால் கிறிஸ்துவே அதற்காக மரித்து, தம்முடைய சுய இரத்தத்தினால் அதை சம்பாதித்துக் கொண்ட சபையின் இரட்சகர், மேலும் நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்புவோமானால், நாம் அதனுடைய அங்கத்தினார்களாக இருக்கவேண்டும்.

ராஜ்யம் அல்லது சபைகுறித்து சொல்லியிருக்கின்ற எல்லாவற்றையும் வேதவாக்கியங்களிலிருந்து நீங்கள் எடுத்துப் போடுவீர்களானால், எவ்வளவாய் நீங்கள் இழந்து போனவர்களாயிருப்பீர்கள்? மேலும், கிறிஸ்து சபையைக் கட்டியிருந்தால், அவரே அதன் தலைவராகவும் அதன் இரட்சகராகவும், அதனுடைய மூலைக்கல்லாக தம்மை ஒப்புவித்தவராகவும் தம்முடைய நாமத்தினால் அதனை அழைத்தவராகவும் இருக்கிறார். அவர் அதைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பேன் என வாக்களித்திருப்பாரனால், சபை முக்கியமற்றது என எவ்வாறு ஒருவர் நினைக்க முடியும்? மேலும் நாம் உலகத்திற்கு இதை பிரசங்கியாவிட்டால் இதைப்பற்றியும், இதனுடைய தெய்வீக ஆரம்பத்தினைப் பற்றியும், இதனுடைய நோக்கத்தைப் பற்றியும், இதன் ஊழியத்தைப் பற்றியும், இது தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தில் இதன் முக்கியத்துவத்தின் பிரமாண்டமான ஸ்தானத்தைப் பற்றியும் மனுஷர் எவ்வாறு அறிவார்கள்?

இறுதியாக, நாம் சபையை உயர்வாக மதிப்போமாக, கர்த்தர் அன்பு கூருகிறவண்ணம் நாமும் அன்பு கூருவோமாக, அதிலுள்ள அங்கத்தினர்களுக்காக நன்றி யுள்ளவர்களாயிருப்போமாக, மேலும் நாம் மிக ஆர்வத்துடன் மற்றவர்களுக்கு இதைப் பற்றிக் கூறுவோமாக அப்போது தான் முழு உலகமும் இந்த ராஜ்யம் உண்மையாகப் பரவும். பவுல் கூறியது போல், “சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலை முறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்” (எபே3:21).

## நீங்கள் காயுவைப் போன்றோரா? 

M.Rajamani

1. யோவான் தன் மூன்றாம் நிருபத்தை காயு என்பவனுக்கு எழுதினான். பிரியமானவன் என்றும், சத்தியத்தில் நடக்கிறவன் என்றும், செய்கிறதை உண்மையாய்ச் செய்கிறவனென்றும் அதில் சொல்லுகிறான் - (3யோவான் 1-11)
2. பவுலுக்குப் பிரயாணத்தில் கூட்டாளியாய் இருந்த மக்கெதோனியனாகிய காயு எபேசுவில் நடந்த கலகத்தில் இவனும் அகப்பட்டான் - (அப்.19:29).
3. தெர்பையனாகிய காயு, பவுலின் மூன்றாம் பிரயாணத்தில் கிரேக்கிலிருந்து ஆசியா மட்டும் போனான் - (அப்.20:4)
4. பவுலையும் சபையனைத்தையும் உபசரித்த காயு - (ரோம.16:23)
5. இவன் குணப்பட்டு பவுலினால் ஞானஸ்நானம் பெற்றான் - (1கொரி.1:14,15)



பெண்கள் பகுதி


# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?
# Can Man Find the Way to God?

*-Betty*

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**எப்லா பட்டணத்திலிருந்த மெசப்பொத்தேமியர்கள்**

மெசப்பொத்தேமியா நகரமாகிய எப்லா அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டபொழுது 15,000 களிமண்பலகைகளும் அதன் துண்டுகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. சிருஷ்டிப்பை குறித்த இவ்வரிகள் அத்தகைய களிமண்பலகைகள் ஒன்றிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டதாகும்:




"வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே
பூமிஇருக்கவில்லை, நீரே அதை சிருஷ்டித்தீர்,
பகல் உண்டாயிருக்கவில்லை, நீரே அதை சிருஷ்டித்தீர்
காலை வெளிச்சம் உண்டாயிருக்கவில்லை
நீர் இன்னும் அதை உருவாக்காமல் இருந்தீர்"

"இவ்வார்த்தைகள் ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தை எதிரொலிக்கின்றன. இவைகள் வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவைகள் அல்ல, ஆனால் கி.மு.2500-ல் எப்லா நகரத்தின் ராயல் நூலகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு இலக்கிய பாடத்தின் மூன்று நகல்களில் காணப்பட்டது.

மதத்தை குறித்த பாடமானது கடினமாக அதிக பொருத்தமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நான்கு வரிகளும் மொத்தத்தில் சுருக்கமாக இந்த உலகம் எவ்வாறு உருவாகியது என்பது பற்றிய எப்லா நகர ஜனங்களின் கொள்கையை ஒருங்கிணைத்து சொல்கின்றன வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவராயிருந்து பூமியையும் பகல் வெளிச்சத்தையும் உண்டாக்கியவர் எல்லாவற்றுக்கும் மேற்பட்ட ஒருவராக இருக்கிறார் (ஜியோவன்னி பெட்டி நாட்டோ எழுதிய **எப்லா நகரத்தின் ஆவண காப்பகம்** என்ற நூல்)

***சீனர்கள்***

தொன்மையான கரை பலி சடங்காச்சாரத்தின்படி இந்த வார்த்தைகள் பேசப்பட்டன:

"கர்த்தர் டெ(ஷேங்க்டி), தீர்மானம் செய்த பொழுது வானம், பூமி, மனுஷன் உருவாகும்படி சொன்னார். வானத்துக்கும் பூமிக்கும் இடையே ஒழுங்கான முறையில் தனியாக மனுஷரையும், சகல வஸ்துக்களையும் வானங்களிலே எங்கும் பரந்து விரிந்திருக்கும்படி செய்தார் (ஜேம்ஸ் லெக்கி என்பவர் எழுதிய "தேவன் மற்றும் ஆவிகளை குறித்த சீனர்களின் கருத்துக்கள்" என்ற நூலில் இருந்து).

ஆதியிலே இருள் இருந்தது, எவ்விடத்திலும் ஒரு பெரிய வெற்றிடம் இருந்தது. அந்த ஷேங்க்டி மனுஷன் மண்ணிலிருந்து தோன்றும் படியாக பேசினார், சகலமும் தன் தன் இனத்தின் படியே விருத்தியாகக் கடவது என்று பேசினார் என்று சீன ஜனங்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

திரும்பவும் புராதனகாலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சொந்த குணாதிசயத்தின்படி தோட்டத்திலே ஆதாம், ஏவாள் சிருஷ்டிக்கப்பட்ட விதம், சர்ப்பம் ஏவாளை வஞ்சித்தது என்ற சம்பவத்தையும் சொல்கிறார்கள். "சோதனைக்காரனுக்கான"



# ஆசிரியர் கடிதம்



வாசகர் அனைவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது மாத இதழ் தற்போது 5000 பிரதிகளாக அச்சிடப் பட்டுள்ளது. உங்கள் நண்பர்கள் உறவினர்கள் மற்றும் சுவிசேஷத்தை விரும்பிகேட்கும் யாவருக்கும் இவ்விதழை கொடுத்து அவர்களுடைய முகவரிகளை எமக்கு தெரியப்படுத்துங்கள்.


இவ்விதழின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை எங்களுக்கு எழுதிதெரியப்படுத்துங்கள்.

உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், உங்களுடைய குடும்பங்களுக்காகவும், உங்களுடைய வேலைகளுக்காகவும், எதிர்வரும் ஆண்டில் கர்த்தர் உங்களோடிருந்து பெரிய காரியங்களைச் செய்யும்படியாகவும் நாங்கள் அனுதினமும் ஜெபிக்கிறோம்.

**வேத அறிவுப்போட்டி: 170 -ல் வெற்றிபெற்றவர்கள்**

1. Tmt. மரகதம் திரவியம் - கோம்பை
2. J. ஜன்பிரபாகர் - கல்லிப்பட்டி
3. M. ராமச்சந்திரன் - தூத்துக்குடி
4. R. கஸ்தூரி - தூத்துக்குடி
5. T. ஏஞ்சலின் நேசமலர் - மதுரை
6. Mrs. ராஜம்மாள் மனேகரன் - திருப்பூர்
7. S. தங்கம் - கன்னியாகுமரி
8. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி
9. A. ரெபேக்காள் - மதுரை
10. Mr. சந்தோஷ் - தருமபுரி
11. S. லதா - தேனி
12. Miss. சாந்தாதேவி - தேனி
13. T. ராஜாத்தி - கோம்பை
14. K. மோகன் - குமாரபாளை
15. Sis. அல்லிராணி காட்வின் - சென்னை
16. D. டேவிட் - சென்னை

**"உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்"**
**சங்கீதம் 119:148**



**தேனி மாவட்டத்து வேதஅறிவுப்போட்டியாளர்கள் 16.11.2011 மாலை 5.00 மணிக்குகீழ்க்கண்ட முகவரியில் பரிசுகளைப் பெற்றுச்செல்லுங்கள்**
**சகோ.ஜீவதுரை, சபை ஊழியர்- 9962345692**
கிறிஸ்துவின் சபை
**பாலோடை ரோடு, ஆனைமலையான்பட்டி, ராயப்பன்பட்டி வழி, தேனி மாவட்டம்**

**வேத அறிவுப்போட்டி: 170 -ன் விடைகள்**

1. பவுல் - 2தீமோ.4:6
2. எஸ்றா, செப்பனியா - எஸ்றா 10:2
3. ஆம் - தீத்து 1:9
4. எஸ்றா - நெகே.8:3
5. ஒநேசிமு, பிலோமோன் - பிலே.16
6. ஆமான் - எஸ்.3:10
7. வேசிப்பிள்ளை - எபி.12:8
8. ஒருவனுமில்லை- யோபு 14:4
9. ஐசுவரியவான் - யாக்.1:11
10. தாவீது - சங்.22:22

சகோதரிகளே, அன்று அந்த புத்தியுள்ள எஸ்தர், நான் செத்தாலும் சாகிறேன் எனக் கூறி ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணி, மன்றாடி யூதருக்கு விடுதலையும், களிப்பும், மகிழ்ச்சியும் உண்டாகப் பண்ணினாள். யூதருக்கு வெளிச்சமும், விடுதலையும் உண்டாகும்படி ராஜமேன்மை அவளுக்குக் கிடைத்திருந்தது. இன்று நமக்கோ ஆவிக்குரிய ராஜமேன்மை கிடைத்துள்ளது. இந்த ராஜமேன்மை நம்முடைய குடும்பத்தாரின் வெளிச்சத்திற்கும், விடுதலைக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாயிருக்கக் கூடாதா?. 2தெச.1:7-10-ல் கூறப்பட்டுள்ளபடி தேவனை அறியாத நம்முடைய குடும்பத்தாரை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமானவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவதும், மன்றாடுவதும் மிகவும் அவசியமல்லவா? அன்பு சகோதரியே, உங்கள் கணவனின் இரட்சிப்பைக்குறித்தும், பிள்ளைகளின் இரட்சிப்பைக் குறித்தும் கவலையற்றவர்களாய் இருக்க வேண்டாம். ஐயோ, இரட்சிப்பைக் குறித்து பேசினாலே வீட்டில் ரகளை தான் ஏற்படும் என்கிறீர்களா? தேவசமூகத்தில் தரித்திருந்து வேதாகமத்தின் மூலம் கர்த்தரிடத்திலிருந்து வரும் அறிவையும் புத்தியையும் பெற்றுக் கொண்டு குடும்பத்தைக் கட்ட ஆரம்பியுங்கள். உங்கள் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை உங்கள் கணவர் பார்த்து போதனையின்றி உங்கள் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார் (1பேது.3:1,2). தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு உங்கள் புருஷரிடத்திலும், உங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவராகவும், தெளிந்த புத்தியுள்ளவராகவும், கற்புள்ளவராகவும், வீட்டில் தரித்திருக் கிறவராகவும், நல்லவராகவும், உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவராகவுமிருங்கள் (தீத்.2:4,5). இப்படி நடந்து கொள்ளும்போது தேவன் உங்களுக்கு உதவிசெய்வார். நீங்களும் புத்தியாய் உங்கள் குடும்பத்தை கிறிஸ்துவாகிய பேழையில் ஏறப்பண்ணுவீர்கள். எஸ்தரைப்போல துணிச்சல் கொண்டு, "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி.4:6,7).

இதோ, கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். "...... கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). எனவே நம்முடைய குடும்பத்தைக் குறித்து பாரமுள்ளவர்களாய் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுவோம். "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிற..." (2கொரி.7:10)

ராஜமேன்மையைப் பெற்றுள்ள நாம், சிலர் கவலையற்றவர்களாயிருப்பது போல நாமும் இல்லாதபடி நம்முடைய குடும்பத்தாரை, நம் ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், விடுதலையும் உண்டாக ஆத்தும பாரங்கொண்டு நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமாயிருக்கிறவரை நோக்கி, மன்றாடுவோம். வேதம் நம்மில் எதிர்பார்க்கிறபடி புத்தியாய் கிரியை நடப்பிப்போம். நம்முடைய விசுவாசத்தின் கிரியைகளைக் கர்த்தர் பார்த்து நம்முடைய குடும்பம் கட்டப்படவும் கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் குடும்பத்தார் அனைவரும் சேர்க்கப்பட்டு நித்திய அழிவிலிருந்து காக்கப்படவும் உதவிசெய்வாராக!.



அடையாளம் இன்னும்மற்ற 7 பேரை சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கிறது. "இரகசியம்" "மனுஷன்" "தோட்டம்" (ஜீவனுள்ள) "பிசாசு" "மரங்கள்" மற்றும் "மறைத்தல்" ஆகியவைகள் ஆச்சரியமாக இப்பாஷையின் தன்மைகள். நாம் ஆதியாகமம் குறிப்பில் வாசிக்கிற அநேக சம்பவங்களை தங்களுக்குள்ளே உறுதியாக நிலை நிறுத்தியிருக்கின்றன.

சிருஷ்டிப்பு பற்றிய வேதாகம குறிப்பு

சிருஷ்டிப்பை குறித்த வேதாகம குறிப்பு ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டபடி இந்த வார்த்தைகளுடன் தொடங்குகிறது:

"ஆதியிலே தேவன்..." "...தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையாயும் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.

பின்பு தேவன் "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார். "சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று"

பின்பு தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாகக் கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். தேவன் ஆகாய விரிவை உண்டுபண்ணி, ஆகாய விரிவுக்கு கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார், அது அப்படியே ஆயிற்று. தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று.

"பின்பு தேவன், வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது தேவன்: "பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.

பின்பு தேவன், பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக் கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கவும், பகலையும் இரவையும் ஆளவும்,

வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகிய நாலாம் நாள் ஆயிற்று.

"பின்பு தேவன்: 'நீந்தும் ஜீவ ஜந்துக்களையும் பூமியின் மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக் கடவது என்றும் சொன்னார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

"பின்பு தேவன்: 'பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும் காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

"பின்பு தேவன்: 'நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி.1:1-28).

**ஜெபியுங்கள்**

- இம்மாதம் முதல் நமது இதழ் 5000 பிரதிகளாக வெளிவர கர்த்தர் கிருபை செய்தபடியால்...
- புதிய வாசகர்களுக்காக, அவர்கள் சத்தியத்தை அறிந்துகொள்ளும்படியாக...
- கடந்தமாதம் சுவிசேஷ சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றவர்களுக்காக...
- நம் தேசத்திற்கு கர்த்தர் நல்ல மழையை கொடுத்தபடியால் நன்றி சொல்லி...
- வேத அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளும் அனைத்து வாசகர்களுக்காக...
- புதிதாக வெளிவந்துள்ள Vol.3 ரேடியோ மற்றும் டிவி செய்தி அடங்கிய புத்தகத்திற்காக...
- World Evangelism Bible School வளர்ச்சிக்காக...




தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**








**பெண்கள் பகுதி**

# புத்தியுள்ள ஸ்திரீ
## A Wise Woman

*- Glory Arjunan*



ஒரு புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுவாள் என வேதம் கூறுகிறது. குடும்பமாகிய வீடு கட்டப்பட வேண்டுமானால் அது ஒரு புத்தியுள்ள ஸ்திரீயினால் மட்டுமே கூடும். அன்பு சகோதரியே, உங்கள் குடும்பம் எப்படியுள்ளது? என்ன வந்தாலும் அசைக்கப்படமுடியாத கன்மலை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட குடும்பமாக உள்ளதா? அல்லது இடிந்து சின்னாபின்னமாக கிடக்கும் ஒரு கட்டத்தைப் போல் ஆளுக்கொரு பக்கமாக சிதறிப்போய் கணவன் ஒரு வழியிலும், மகன் இன்னொருவழியிலும் மகள் மற்றொரு வழியிலும் மனம் போல வாழ்வு என நாட்களைக் கழிக்கின்ற குடும்பத்தைப்போலிருக்கிறதா? சகோதரியே, நம் குடும்பம் நோவாவின் குடும்பத்தைப் போல் ஒரே பேழையில் பயணம் செய்து நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கூட தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டால் அத்துடன் திருப்தியடைந்தவர்களாகவோ அல்லது தன் குடும்ப அங்கத்தினர்கள் குறித்து கவலையற்றவர்களாகவோ இருந்து விடுகின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தம் நம்மை பாவமறக்கழுவி சுத்திகரித்து நமக்கு ராஜமேன்மையைக் கொடுத்திருக்கிறது. "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது.2:9) என வேதம் கூறுகிறது.

யூதர்கள் அழிவின் விளிம்பில் இருந்தபோது மொர்தெகாய் எஸ்தருக்கு அதைத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற்குப் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும், மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான் (எஸ்.4:8). அன்று யூதர்களுக்கு நியமிக்கப்பட்டது சரீர அழிவு. அந்த அழிவிலிருந்து யூதர்கள் காக்கப்பட வேண்டுமென எஸ்தர் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டியவளாக இருந்தாள். மேலும் மொர்தெகாய் எஸ்தருக்கு, "நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத்தெரியும், என்று சொல்லச் சொன்னான்" (எஸ்.4:14).

ஆனால் இன்று, "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது ..... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2தெச.1:7-10) என வேதம் கூறுகிறது. அன்பு